(b) whether this special allowance was stopped immediately after the present Government assumed office ; and

(c) whether the Government have decided to recover the amount that had been paid as special allowance from the personnel belonging to the Police Department at the rate of Rs. 11 per month ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

(உ) இவ்வினு எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

மூடப்பட்ட கோவை ஆலைத் தொழிலாளர் வெளி மாநிலங்களுக்குச் சென்றதும் தாக்கப்பட்டு திரும்பியதும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. என். குமாரசாமி அவர்கள் "அண்மையில் கோவை பகுதியில் இருந்து சென்ற மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் வெளி மாநிலங்களில், வேலைக்காகச் சென்றுதாக்கப்பட்டு, உடைமைகள் கைப்பற்றப்பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகின்றனர்" என்ற அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கவேண்டுமென்று பேரவையின் விதி 42-ன் கீழ் ஓர் அறிவிக்கை கொடுத்திருக்கிறார். இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. மேலும் மூடப்பட்ட ஆலைகளின் பிரச்சினைபற்றி இங்கே விவாதிப்பது முறையற்றது. எனவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளித்தார். இது முக்கியமான பிரச்சினையாக இருந்தும், மூலக்கேள்வி போட்ட எனக்கு ஒரு துணைக்கேள்வி போடுவதற்கு தாங்கள் அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. உறுப்பினர்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருந்து எதை வேண்டுமானாலும் பேசுவது கூடாது என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து எதை வேண்டுமானாலும் சொல்வதற்கு இந்தச் சபை இடம் கொடுக்காது.

3. தகவல் கோரல்

விநாயக சதுர்த்திக்கு விடுமுறை

THIRU K. VINAYAKAM: On a point of information, Sir, Tuesday happens to be the birthday of Lord Vinayaka. That day used to be generally declared a holiday under the Negotiable Instruments Act. Is it going to be done now or is the Government going to declare all offices closed ? Even if the Government does not close down all offices on that day, what about this House ? Are we going to sit on that day ? What is your decision, Sir ? I believe the Hon. Chairman of the Legislative Council has declared a holiday for the Council for that day. If we have a sitting in the evening of that day, they want to have a holiday. We are mostly

Hindus and we believe still in Gods, in spite of this Government. We still have religious qualities. May I know your decision in this regard ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசாங்க அலுவலகங்களுக்கு விடுமுறையா, இல்லையா என்பதைப்பற்றி முடிவு செய்வது இந்த அவையினுடைய பொறுப்பு அல்ல. இரண்டாவது, சபைக்கு விடுமுறை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி முடிவு செய்வதற்கு அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் அதைப்பற்றி முடிவு செய்யலாமே தவிர இந்த மன்றம் அதைப்பற்றி முடிவு செய்யத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அன்றையதினம் விடுமுறை உண்டா என்பதைப்பற்றி இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் கருத்து அறிந்து தெரிவிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(i) விஞ்ஞான மந்திர்கள் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கிராமப்புற மக்கள் மத்தியில் விஞ்ஞான அறிவையும் நவீன விவசாயத் தொழில் முறையையும் புகுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த "விஞ்ஞான மந்திர்"களை தற்போதிருக்கும் அரசு மூடியிருப்பதால் விவசாயிகள், கிராமப்புற மக்கள் ஆகியோருக்கு ஏற்பட்டுள்ள நிலைபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விஞ்ஞான மந்திர்கள் தமிழகத்தில் 6 இடங்களில் செயல்பட்டன. (1) ஆரியக்கவுண்டன்பட்டி (சேலம்), (2) பெரியநாயக்கன்பாளையம் (கோவை), (3) எஸ். வி. நகரம் (வட ஆர்க்காடு), (4) தே. கல்லுப்பட்டி (மதுரை), (5) வளவனூர் (தென் ஆர்க்காடு), (6) குருக்கத்தி (தஞ்சை).

மத்திய அரசால் இவை ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளுக்குப் பின் 1963-ம் ஆண்டு இவை மாநில அரசுக்கு மாற்றப்பட்டு கல்வித்துறை நிர்வாகத்தில் வந்தன. 1966-ல் இவை உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பின்னர் மத்திய அரசு இந்த விஞ்ஞான மந்திர்கட்குக் கொடுத்து வந்த உதவித் தொகையை நிறுத்திவிட்டது.

இந்த விஞ்ஞான மந்திர்களின் நோக்கங்கள் உயர்ந்தவையாக இருந்த போதிலும் இவை (effective-ஆக) திறம்பட்ட முறையில் செயல்படவில்லை. இவை செயல்படும் முறையை ஆராய R.D. and L.A -யைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று சமீபத்தில் விஞ்ஞான மந்திர்களை எல்லாம் பார்வையிட்டு அதன் அறிக்கையைக் கொடுத்தது. எல்லா இடங்களிலும் இம்மந்திர்கள் செயல்படும் முறையில் குறைகள் காணப்பட்டன. இவற்றின் முக்கிய வேலையான மண்வள சோதனை (Soil Test) இரத்த, மூத்திர சோதனை (Blood, Urine and Pathological analysis) இவற்றைச் செய்ய பூரண வசதிகள் இல்லை எனவும் காணப்பட்டது. இதிலுள்ள அதிகாரிகள் எம்.எஸ்.ஸி. படித்தவர்கள். ஆனால், இவர்களுக்குத் தளவாடங்கள் இல்லாத குறையாலும், இவர்களுடன் தொடர்ந்து வேலை செய்யும் அலுவலர்கள் (follow up work) இல்லாததாலும் இவர்கள் வேலை பயன்படவில்லை. விஞ்ஞான மந்திர்கள் எடுபட்டதால் கிராமத்துக்கு பெரு நஷ்டம் ஏற்படாது. மண்வள சோதனைகளை விவசாய இலாகாவே இப்போது செய்கிறது. அதற்காகத் தனியாக நிறுவனம் தேவையில்லை. தவிர, Rural Extension Training Centre (R.E.T C.)களும் இந்த வேலையைச் செய்ய முற்படும். Identification of pest and diseases விவசாயப் பயிர் நோய்களைக் கண்டுபிடித்து ஆவன செய்யும் வேலையை விவசாய இலாகாவும் கிராம சேவக்குகளும் செய்து வருகிறார்கள். விஞ்ஞான